உ

# வேதங்கள் அருளியவாறு

**ப்ரஹ்மஸ்ரீ டாக்டர். ஸே. அருணஸுந்தர குருக்கள், M.A., M.Phil., B.Ed., Ph.D.**

வடமொழி இலக்கணப் பேராசிரியர், சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி, சென்னை

நாம் சைவர்கள். எனவே சிவபெருமானை மையப்படுத்தியே நமதனைத்தும் அமையும். அதிலும் நாம் வைதிகச் சைவர்கள். எனவே வேதங்களை விட்டுச் சிவபெருமானையோ, சிவபெருமானை விட்டு வேதங்களையோ பிரிக்காமல் அமைக்கப்பட்டதே நமது வாழ்வு முறையாகும். அதிலும், நாம் வைதிகத் தமிழ்ச் சைவர்கள். எனவே, தமிழை விடுத்துச் சிவபெருமானையோ, சிவபெருமானை விடுத்துத் தமிழையோ பிரிக்காமல் அமைக்கப்பட்டதே நமது சமய வாழ்வுமுறை ஆகும்.

எனவேதான், நமக்குச் சமய அறிவை போதிக்கக்கூடிய நமது சமயாசாரியர்களும், சாத்திர அறிவை போதிப்பதற்காகவே, குரு-சிஷ்ய பரம்பரையில் வந்த சந்தானசாரியர்களும், இன்னும் பலப்பல அருளாளர்களும், நம் பெருமானை வடமொழி வடிவினராகவும், தென்தமிழ் வடிவினராகவும், வேதவடிவினராகவும் பல இடங்களில் நேரடியாகவும், குறிப்பாகவும் உணர்த்தி யுள்ளனர். அந்த உணர்வித்தலின் உரத்தக் குரலே,

**“வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்”**

- பா.எண்- 1, திருச்சிவபுரம், நாவுக்கரசர், ஆறும் திருமுறை.

என்பதாகும்.

அவர்கள் சிவபெருமானுகிய பெருங்கருணைக் கடலில், வடமொழி, தென்தமிழ், மறைகள் ஆகிய மஹாநதிகளை இணைத்தே வழிகாட்டியுள்ளனர். நம் பெருமானை மறை ஓதும் அந்தணராகவும், செந்தமிழ்ச் சொக்கராகவும் காட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

**திருமுறைகளில் ‘மறை’ என்ற சொல் ஏராளமாகக் காணக்கிடைக்கின்றன:-**

“அரு**மறை** சொன்ன தென்னே”

- பா.எண்- 1, திருச்சேய்ஞலூர், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

“**மறை** வழக்கமிலாத மாபாவிகள்”

- பா.எண்- 3, திருஆலவாய், ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

“அரு**மறை** சிந்தை செய்யா”

- பா.எண்- 5, திருஆலவாய், ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

“நலிமலிதரு **மறை**மொழியொடு”

- பா.எண்- 9, திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

“மறை” என்ற இச்சொல்லின் பொருள் என்ன? என்று உறுதி செய்யவேண்டும். அப்பொருளின் தன்மை போன்றவை என்ன? என்றும் உறுதி செய்யவேண்டும்.

**திருமுறைகளில் ‘மறைகள் பல’ என்ற குறிப்பும் உள்ளது:-**

“**பன்மறை** யோரவர் தாம்பரவ”

- பா.எண்- 5, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

“**மறையாயின பல**சொல்லியொண் மலர்சாந்தவை கொண்டு
முறையான்மிகு முனிவர் தொழு முதுகுன்றடைவோமே”

- பா.எண்- 5, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

“**வேதங்கள் வேறு வேறு** தெரித்தவன்”

- பா.எண்- 1, திருவல்லம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

‘பல’ என்று ஏன் குறிப்பிட்டனர் என்று நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். கம்பர் பெருமானும்,

“**எல்லையில் மறைகளாலும்** இயம்பரும் பொருள்”

எனக் குறிப்பிடுவதை நினைவிற்கொள்ள வேண்டும்.

**அதேபோல திருமுறைகளில் ‘நான்கு’ என்ற உரிச்சொல்லும் ஏராளமாகக் கேட்கப் படுகின்றன:-**

“செய்தவ **நான்மறையோர்**களே த்தும்சீர் கொள்
செங்காட்டங்குடியதனுள்’

- பா.எண்- 2, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

“**நான்மறை** யோர்வழி பாடுசெய்ய”

- பா.எண்- 4, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

‘**மறைநான்கும்** விரித்து கந்தீர்’

- பா.எண்- 4, திருமுதுகுன்றம், சுந்தரர், ஏழாம் திருமுறை

“பண் ஒளிசேர் **நான்மறையான்**’

- பா.எண்- 6, திருவாக்கூர் தான்தோன்றிமாடம், ஞானசம்பந்தர், இரண்டாம் திருமுறை.

“பண் அமரும் **நான்மறையர்**’

- பா.எண்- 7, திருத்தோணிபுரம், ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

‘**மறைகள் நான்கும் ஆனவன்** காண்’

- பா.எண்- 1, திருச்சிவபுரம், நாவுக்கரசர், ஆறும்திருமுறை.

எனவே மறைகளின் அந்த நான்கு பிரிவுகள் யாவை? என மயக்கமற உணருதலும் சைவரின் கடமையாகும்.

**பிற்காலங்களில் போலிச்சைவர்களின் பிடிக்கு நாம் ஆளாகி விடுவோமோ என்ற ஐயம் நமது சமய-சந்தானுசாரியர்களுக்கு இருந்ததாலோ என்னவோ, அவர்கள் ஒரே மாதிரியாக 'நான்மறை' என்று மட்டுமே குறிப்பிடாமல், பல இடங்களில் 'நான்மறைகள்' என்பது போலவே, 'நால்வேதம்', 'சுருதி' என்றும் சுட்டிக் காண்பித்துள்ளனர்:-**

"அறங்கிளரும் நால் வேதம்"

- பா.எண்- 7, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"**வேதம் நான்கினு** மெய்ப்பொருளாவது'

- பா.எண்-, பொது, ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

"**நால் வேதம்** சரித்தது நன்னெறி"

- பா.எண்- 5, பொது, நாவுக்கரசர், ஐந்தாம் திருமுறை.

"ஆறங்கம் ஐவேள்வி இணைந்த **நால்வேதம்** மூன்று எரி"

- பா.எண்- 6, திருஓமாம்புலியூர், ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

"சொற்பால பொருட்பால **சுருதி ஒரு நான்கும்**"

- பா.எண்- 5, திருக்கலயநல்லூர், சுந்தரர், ஏழாம் திருமுறை.

எனவே மறை, வேதம், ச்ருதி ஆகிய சொற்கள் ஒரே பொருளை உணர்த்தும் "பர்யாயச் சொற்கள்" (பல்வேறு சொற்கள்)என்பது உறுதியாகிறது.

இதோடு நில்லாமல் இருக்கு, ஆரணம், சந்தோகம், சாமம், சந்தோகசாமம் என்றெல்லாம் குறிப்பிட்டு, பெருமானின் வழிபாட்டில் ஓதப்படுவனபோலும், பெருமானின் திருத்தலங்களில் பயிலப்படுவனபோலும், வேதங்களின் சில பெயர்கள் காணப் படுகின்றன. எனவே இவையெல்லாம் என்ன? என்றறிய நாம் கடமைப் பட்டுள்ளோம்.

பரமேச்வரனைப் புகழுவதற்காகவும், அவர் புகழைப் பாடுவதற்காகவும் அருளப் பட்டவையே தேவாராதி – திருமுறைகள். நம்மிறைவனை வாயாறப் புகழுவதை விட்டுவிட்டு, மேற்படி விஷயங்களுக்கு விளக்கம் கொடுப்பது அந்நூல்களின் நோக்கமல்ல. எனினும், பெருமானைப் புகழும்போது, நமது தமிழ்-வைதிக-சைவசமயக் கொள்கைகளையும் பல இடங்களில் மறைமுகமாய் நிலைநிறுத்தி விட்டார்கள். அவ்வாறு நிலைநிறுத்தப்பட்ட கொள்கை களுள் வேதம் பற்றிய விபரங்களைப் பார்ப்போமாக.

நமது சமயம் சிவபெருமானோடு தொடர்புடையது; சிவபெருமானை மையப் படுத்தியது என்பதோடல்லாமல் சிவபெருமானாலேயே ஸ்தாபிக்கப்பட்டது – என்பது நமது சைவசமயத்தின் தனிப்பெருஞ் சிறப்பாகும்.

**“சிவேன ஸ்தாபிதம் சைவம் சைவேன ஸ்தாபிதம் சிவம்”** என்ற ஸ்ரீமத்காரணாகம வசனம் இதனை நிலைநிறுத்தும்.

தாம் ஸ்தாபித்த வைதிகத்-தமிழ்ச்-சைவசமயத்திற்குரிய வேதங்களைத் தாமே சார்ந்திருந்ததால், நம் பெருமானை “வேதர்” என்றும், அவரே அவ்வேதங்களை விரித்தோதினார் என்றும்,

**“வேதர், வேதமெலாம் முறையால் விரித்து**
**ஓத நின்ற ஒருவனார்”**

- பா.எண்- 3, திருப்பராய்த்துறை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

என்ற வரி உறுதி செய்கிறது.

எனவே வேதங்கள் நம் இறைவனால் அருளப்பட்டவை. இறைவனால் வேதங்கள் அருளிச்செய்யப்பட்டவை என்று சொல்லும்போது, ஸ்ம்ருதிகளை மட்டும் கடைபிடிப்பவர் களுக்கு, ஒரு சந்தேஹம் வரலாம்!. அதாவது இறைவனுக்கும் நம்போல் உடம்பு உண்டு என்று ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால் **‘உடம்புடையவன் புருஷன்’** என்றாயிற்று. எனவே **‘புருஷனால் செய்யப்பட்டது பௌருஷேயம்’** என்றாகிவிடும். புருஷனுக்கு வேண்டுதல், வேண்டாமை ஆகிய குற்றங்கள் இருக்க வாய்ப்புண்டு என்பதால், புருஷனாகிய இறைவனால் செய்யப்பட்ட = அருளப்பட்ட வேதங்கள் பௌருஷேயங்கள் என்றாகிவிடும். எனவே அவற்றைப் ப்ரமாணமாகக் கொள்ள முடியாதே! என்ற ஐயம் எழலாம். இருப்பினும் நம்மிறைவன் புருஷ வகையைச் சாராததால்; புருஷதத்துவத்திற்கு அப்பாற்பட்டதால், வேதம் பௌருஷேயமன்று, அபௌருஷேயமே.

அவ்வாறு அருளும்போது, வடமரமாகிய ஆலின் கீழ் அமர்ந்து மறைகளை அருளினார் என்பது,

“அணிபெறு **வடமர நிழலினில்** அமர்வொடுமடியிணை யிருவர்கள்
பணிதர அறநெறி மறையொடு மருளிய”

- பா.எண்- 5, திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

என்ற ப்ரமாணத்திலிருந்து பெறப்படுகிறது.

**தேவர்களும், முனிவர்களும், அந்தணர்களும் வேண்டவே, பெருமான் தானே அவர்களுக்கு அம்மறைகளை உபதேசித்து அருளினார் – என்பது:-**

“அமர்வொடும் அடியிணை **இருவர்கள் பணிதர**”

- பா.எண்- 5, திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

“ஆலின் கீழிருந்தருளி **யமரர் வேண்ட**”

- பா.எண்- 7, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

“அங்கங்கள் ஆறும் நான்கும் **அந்தணர்க்கருளிச் செய்து**”

- பா.எண்- 10, திருச்செம்பொன்பள்ளி, நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

“அரியன அங்கம் வேதம் **அந்தணர்க்கருளும் வைத்தார்**”

- பா.எண்- 4, திருக்கழிப்பாலை, நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

போன்ற திருவாக்குகளால் உறுதியாகிறது.

மறை வேறு, வேதம் வேறு, நால்வேதம் வேறு என்றெல்லாம் பிற்காலத்தில் பொய்யுரை பரப்பி விடுவார்களோ என அஞ்சி, இதே விஷயத்தினை மறுபடியும்,

**“அறங்கிளரும் நால்வேதம் ஆலின் கீழிருந்து அருளி”**

- பா.எண்- 7, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

என்று உணர்த்தவே, வேதம், நால்வேதம், மறை ஆகிய அனைத்தும் ஒன்றே என்பது உறுதி.

மேலும்,

**“அறநெறி** மறையொடும்”

- பா.எண்- 5, திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**“அறங்கிளறும்** நால்வேதம்”

- பா.எண்- 7, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

என்றும் குறிப்பிட்டதால் **‘வேதங்களால் உணர்த்தப்படுவது அறம்’** என்பது முடிவு.

**“சோதனு-லக்ஷண: அர்த: தர்ம:”**

- 1-1-2, ஜைமினி ஸூத்ரம்

என்று மீமாம்ஸகர்களும் இதையே உறுதிப்படுத்துகின்றனர்.

## வேதம் – சொல் விளக்கம்

I. **‘வேதம்’** என்ற சொல்லிற்கு **‘அறியப்பட்டது’** என்பது பொருள். எனவே, சிவபெருமானிடமிருந்து மட்டுமே, தேவர்களாலும் முனிவர்களாலும் அறியப் பட்டவை **‘வேதம்’** என்ற சொல்லால் அழைக்கப்பட்டன. **‘அறிதல்’** என்ற பொருளுடைய, **‘வித்’ (வித-ஜ்ஞானே)** என்ற மூலவினைச் சொல்லிலிருந்து பிறந்ததே **‘வேதம்’** என்ற சொல். இக்கருத்தை **‘அறிதல் = உணர்தல்’** என்ற பொருள்பட,

“ஒன்றும் இருமூன்றும் ஒருநாலும் **உணர்வார்கள்”**

- பா.எண்- 9, திருப்பழுவூர், ஞானசம்பந்தர், இரண்டாம் திருமுறை.

என்று சொல்லியது உணரத்தக்கது.

II. ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினுலோ (காட்சி அளவை), அனுமான ப்ரமாணத்தினுலோ (கருதும் அளவை), பிற அளவைகளாலோ அறியமுடியாத வொன்றை, எந்த அளவையைக் கொண்டு மட்டுமே அறியமுடியுமோ அந்த அளவைக்கு **‘வேதம்’** என்று பெயர். அறமாகிய **‘தர்மம்’**, தெய்வமாகிய **‘ப்ரஹ்மம்’** ஆகிய இரண்டினையும், ப்ரத்யக்ஷம், அனுமானம் முதலிய

அளவைகளால் அறிய முடியாது. இவ்விரண்டினையும் நமக்கு அறிவிக்கக் கூடிய, உணர்த்தக்கூடிய அளவையே **'வேதம்'** எனப்படும். இக்கருத்தானது,

**"ப்ரத்யக்ஷேண அனுமித்யா வா யஸ்து உபாயோ ந புத்யதே!**

**ஏநம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா!!"**

என்ற வரிகளால் உணர்த்தப்படுகிறது.

அறங்கள் = தர்மங்கள், வேதங்களால் மட்டுமே உணரப்படவேண்டியவை என்பதை உணர்த்தவே,

**"அறநெறி மறை"**

- பா.எண்- 5, திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**"அறங்கிளரும் நால்வேதம்"**

- பா.எண்- 7, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

என்று **"அறநெறி" "அறங்கிளரும்"** ஆகிய உரிச்சொல் (விசேஷணம்) பயன் படுத்தப்பட்டது.

மேலும்,

"**நால் வேதம்** சரித்தது நன்னெறி"

- பா.எண்- 5, பொது, நாவுக்கரசர், ஐந்தாம் திருமுறை

என்று 'நால்வேதங்களால் விதிக்கப்பட்டதை கடைபிடித்து ஒழுகுவது நன்னெறி' என்று கூறுவதையும் மறக்கக்கூடாது.

தெய்வமாகிய ப்ரஹ்மமும் வேதங்களால் மட்டுமே உணரப்படவேண்டியவை என்பதை உணர்த்தவே,

"செந்தமிழர் **தெய்வமறை** நாவர் செழுநற் கலை தெரிந்த"

- பா.எண்- 4, திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

என்று **'தெய்வ'** எனும் விசேஷணம் (உரிச்சொல்) பயன்படுத்தப்பட்டது. இதனை,

**"தர்ம-ப்ரஹ்ம-ப்ரதிபாதகம் சாஸ்த்ரம் வேத:"**

என்று விளக்குவர். எனவே, அறத்தையும், தெய்வத்தையும் அறிந்துகொள்ள உபாயமாயுள்ளது **'வேதம்'** என்பது நிச்சயம்.

III. எந்த ஒன்றினை அறிந்தால், பிற அனைத்துக் கல்விகளையும் அறியமுடியுமோ அதற்கு **'வேதம்'** என்று பெயர். இதனை, ருக்-பாஷ்ய-பூமிகா-வில்,

**"ததா ஆதிஸ்ருஷ்டிம் ஆரப்ய, அத்ய பர்யந்தம் ப்ரஹ்மாதிபி: ஸர்வா: ஸத்யவித்யா: ச்ரூயந்தே அநயா ஸா ச்ருதி:"**

என்று ஸாயணசார்யர் குறிப்பிடுகிறார். இந்தக் கருத்தினை நமது ஆசிரியர்கள் முன்பே,

"பெருமேதை மறை ஒலியும்"

- பா.எண்- 2 , திருக்கலயநல்லூர், சுந்தரர், ஏழாம் திருமுறை.

என்று குறிப்பிட்டனர். **'பெருமேதை'** என்ற உரிச்சொல்லிற்கு, **'மிக்க பேரறிவைத் தரும்'** என்று பொருள்.

**மறை = சந்தஸ்**

**I.** ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களுக்கும் புலப்படாதவைகளாகிய **'அறம்', 'இறை'** ஆகிய மறை பொருள்களை விளக்குவதாலேயே (வேதங்களுக்கு) **"மறை"** என்ற பெயரும் ஏற்பட்டது.

**II.** அவ் வேதங்களுக்கு **'உபநிஷத்'** என்ற ஒரு பகுதி உண்டு. இதனை **'ரஹஸ்யம்'** என்று குறிப்பிடுவர்.

**"ஸாங்கம் ஸரஹஸ்யம் ச தமாசார்யம் ப்ரசக்ஷதே"**

**"சத்வார: வேதா: ஸாங்கா: ஸரஹஸ்யா:"**

போன்ற இடங்களில் இதனை அறியலாம். **'மறை'** என்ற சொல், **'ரஹஸ்யம்'** என்ற இந்த சொல்லின் ஒத்த பொருளுடையது. எனவே ரஹஸ்யப் பொருளை விளக்குவதால் வேதங்களுக்கே **'மறை'** என மற்றொரு பெயர்.

**III.** வேதங்களுக்குச் **'சந்தஸ்'** என்றும் ஒரு பெயர். வடமொழியில் சந்த, சந்தஸ் என இரண்டு சொற்கள் உள்ளன. அவற்றுள் **'சந்தஸ்'** என்பதற்கு **'யாப்பு'** என்று ஒரு பொருள். எந்த வேதமந்த்ரமாக இருந்தாலும், ஏதோவொரு யாப்பிற்கு உட்பட்டே இருக்கும். யாப்பிற்கு உட்படாமல் எந்த வேதமந்த்ரமும் கிடையாது என்பதால், வேதமந்த்ரங்களுக்கே **'சந்தஸ்' (யாப்பு)** என்ற பெயர் அமைந்தது.

இதைத் தவிரவும், வேதங்களுக்குச் **'சந்தஸ்'** என்று பெயர் வந்ததற்கான காரணத்தை, **'சாந்தோக்ய-உபநிஷத்'** விளக்குவதையும் பார்க்கலாம். **"ஒருமுறை தேவர்களுக்கு மரணத்திடமிருந்து பயம் ஏற்பட்டது. மரணத்திடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, தேவர்கள் வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்ய ஆரம்பித்தனர். அவ்வாறு ஜபம், ஹோமம் போன்றவற்றைச் செய்யும்போது, வேத மந்த்ரங்களுக்கு உட்பட்டு வேதமந்த்ரங்களால் தங்களை மறைத்துக்கொண்டனர். எனவே தேவர்களைப் பிற இன்னல்களிலிருந்து மறைத்தக் காரணத்தால், மறைத்தல் என்ற பொருளுடைய, 'சத்' (சதிர்-ஸம்வரணே) என்ற மூலவினையிலிருந்து, 'சந்தஸ்' என்ற சொல், 'வேதங்களுக்கு' ஏற்பட்டது"**. சாந்தோக்ய உபநிஷத்தின்

நான்காவது காண்டம், இரண்டாம் மந்த்ரத்தில் இக்கதை உள்ளது. எனவே **"சந்தஸ்"** என்ற சொல்லின் மிகச் சரியான, சூக்ஷ்மமான தமிழ்சொல் தான், **"மறை"** என தமிழிலக்கியங்களில் காணப்படுகிறது.

வேதங்களின் நான்கு பிரிவுகளில் ஒன்ருகிய ஸாம-வேதத்திற்கும், **'சந்தஸ்'** என்று பெயர்.

### ச்ருதி

**'ச்ருதி'** என்பதற்குக் கேட்டல் என்றும், கேட்கப்பட்டது என்றும் பொருள். **'கேட்டல்'** என்ற பொருளுடைய **'ச்ரு' (ச்ரு-ச்ரவணே)** என்ற மூலவினைச் சொல்லிலிருந்து பிறந்ததே **'ச்ருதி'** என்ற இச்சொல்.

**"சுருதிகள்பல நல முதல் கலை துகள் அறு**
**வகை பயில் வொடு மிகு"**

- பா.எண்- 6, திருச்சிவபுரம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**"சுருதியான் தலையும் நாமகள் மூக்கும் சுடரவன் கரமும் முன் இயங்கு"**

- பா.எண்- 5, திருக்கழுமலம், ஞானசம்பந்தர், மூன்ரும் திருமுறை.

**"சுருதி ஆயிரம் ஓதி அங்கமான தொல்கலைகள் எடுத்தியம்பும் தோன்றலாரை"**

- பா.எண்- 265, திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், பெரியபுராணம்.

**"சொற்பால பொருட்பால சுருதி ஒரு நான்கும்"**

- பா.எண்- 5, திருக்கலயநல்லூர், சுந்தரர், ஏழாம் திருமுறை.

என்றவாறு பல இடங்களில் **'வேதம்'** என்ற பொருளிலேயே **'சுருதி'** என்ற சொல் பயன் படுத்தப்பட்டதை நாம் அறியலாம்.

### ஆம்ஞயம் = ஓத்து

வேதங்களுக்கு **'ஆம்ஞயம்'** என்றும் ஒரு பெயர். வாய்விட்டுச் சொல்லுதல், பயிலுதல், மறுபடியும் மறுபடியும் சொல்லுதல், ஓதுதல் போன்ற பொருளுடைய **(ஆ) 'ம்ஞ' {ம்ஞ-அப்யாஸே}** என்ற மூலவினைச் சொல்லிலிருந்து, வாய்விட்டுச் சொல்லி, அடிக்கடி ஓதி, பயிலப்பட்டது என்ற பொருளில் **'ஆம்ஞய'** என்ற சொல் வேதத்திற்கு அமைந்தது. வேதங்களை வாய் விட்டுத்தான் சொல்லவேண்டும். அப்போதுதான் அதனைப் பயில முடியும். ஒருமுறை படித்து விட்டேன் என்று இருக்கமுடியாது. மறுபடியும் மறுபடியும் ஓதிக்கொண்டே இருக்கவேண்டும். இந்த முறை இன்றும் உள்ளது. இன்றுமட்டுமல்ல திருமுறையாசிரியர் காலங்களிலும் இருந்தது. சிவபெருமானும் கூட,

மறை ஓதிக்கொண்டும், பலருக்கு பல சமயங்களில் ஓதுவித்துக் கொண்டும் இருந்தார் என்பதை நமது ஆசிரியர்கள் பதிவிடுவதைப் பார்ப்போமாக:-

**சிவபெருமான் ஆம்னுயங்களை = வேதங்களை ஓதுதல்:-**

"பாலனுக்காயன் றுபாற்கடல் ஈந்து பணைத்தெழுந்த
ஆலினிற் கீழிருந் தாரணம் **ஓதி**"

- பா.எண்- 6, , திருக்கடவூர் வீரட்டம், நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

"அருமறை **சொன்ன** தென்னே"

- பா.எண்- 1, திருச்சேய்ஞலூர், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"மிக்க வேத மெய்ந்நூல் **சொன்னவனே**"

- பா.எண்- 43, நீத்தல் விண்ணப்பம், மணிவாசகர், திருவாசகம், எட்டாம் திருமுறை.

"**வேதம் ஓதி** வெண்ணூல் பூண்டு"

- பா.எண்- 1, திருப்பழனம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"**மறைகள் நிறை நாவர்**"

- பா.எண்- 5, திருநறையூர்சித்தீச்சரம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"வேதர், வேதமெலாம் முறையால் விரித்து
**ஓத** நின்ற ஒருவனூர்"

- பா.எண்- 3, திருப்பராய்த்துறை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"வேத **நாவினர்**"

- பா.எண்-7, திருச்சாய்க்காடு, ஞானசம்பந்தர், இரண்டாம் திருமுறை.

"சாமம் **பாடுவர்**"

- பா.எண்-5, திருஅம்பர் பெருந்திருக்கோயில், ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

"**பாடினர்** சாமவேதம்"

- பா.எண்- 2, திருவதிகை வீரட்டம், நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

"சந்தோக சாமம் **ஓதும்** வாயானை"

- பா.எண்- 4, திருவீழிமிழலை, நாவுக்கரசர், ஆறும்திருமுறை.

"வேதம் **ஓதி** வெண்ணீறு பூசி"

- பா.எண்- 7, திருமுருகன்பூண்டி, சுந்தரர், ஏழாம் திருமுறை.

"மந்திர வேதங்கள் **ஓதுநாவர்**"

- பா.எண்-9, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"ஓதினர் வேதம் **வாயால்**"

- பா.எண்- 5, கோயில், நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

மேற்கூறிய அருள்வாக்குகளின் மூலம் **'ஆம்னய'** என்ற சொல்லை சிவபெருமான் தானுகவே பொருளுடையதாக்கினுர் என்பது தீர்மானம். இவ்வாருக, அடிக்கடி ஓதப் படுதலால், 'ஓத்து' என்பது, 'ஆம்னய' என்ற சொல்லின் சரியான பெயர்ப்புச் சொல்லாகும். ஆம்னய என்பதன் தமிழ்ச்சொல்லான ஓத்து என்பதை ஞானசம்பந்தப் பெருமான்,

"ஓத்து அரவங்களோடும் ஒலி காவிரி ஆர்த்து அயலே"

- பா.எண்- 2, திருக்குடமூக்கு, ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

என்று பாடியுள்ளார். ஓத்தரவங்கள் என்பதற்கு 'வேதத்வனிகள்' என்று பொருள்.

## சிவபெருமான் ஆம்னயங்களை ஓதுவித்தல்:-

சிவபெருமான் வேதங்களை ஒருமுறை ஒருவருக்கு உபதேசித்து விட்டோம் என்று விட்டு விடவில்லை. மறுபடியும் மறுபடியும் பலருக்கு உபதேசித்துக் கொண்டே இருக்கிறுர் என்பது,

"நால்வேதம் ஆலின் கீழிருந்தருளி யமரர் வேண்ட"

- பா.எண்- 7, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"ஆலினிற் கீழிருந் தாரணம் ஓதி அருமுனிக்காய்ச்"

- பா.எண்- 6 திருக்கடவூர் வீரட்டம், நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

"அணிபெறு வடமர நிழலினில் அமர்வொடுமடியிணை யிருவர்கள்
பணிதர அறநெறி மறையொடு மருளிய"

- பா.எண்- 5, திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"அங்கங்கள் ஆறும் நான்கும் அந்தணர்க் கருளிச் செய்து"

- பா.எண்- 10, திருச்செம்பொன்பள்ளி, நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

"அரியன அங்கம் வேதம் அந்தணர்க் கருளும் வைத்தார்"

- பா.எண்- 4, திருக்கழிப்பாலை, நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

இவ்வாருக பெருமானும் வேதங்களை எந்நேரமும் ஓதியும், ஓதுவித்தும் இருப்பதால், அவரது அடியார்களும், பெருமான் உறையும் தலங்கள் தோறும், வேதம் ஓதிக்கொண்டே இருந்தனர். வேதம் ஓதியே இறைவனை வழிபட்டனர் என்பதையும் இனி காண்போமாக:-

"வேதம் பயின்றேத்திப் புலன்கள் தமை வென்றுர்"

- பா.எண்- 8, திருப்புள்ளமங்கை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"கலியான்மலி மறையோரவர் கருதித் தொழுதேத்த"

- பா.எண்- 2, திருப்புள்ளமங்கை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"நாண்மலரால் நல் இருக்கு மந்திரம்
கொண்டு ஒன்றி வழிபாடு செயலுற்றவன்"

- பா.எண்- 3, திருக்கோளிலி, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

"மறையாயின பலசொல்லியொண் மலர்சாந்தவைகொண்டு
முறையான்மிகு முனிவர்**தொழு** முதுகுன்றடை வோமே"

- பா.எண்- 5, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

மேற்படி ப்ரமாணங்களால், வேதம் ஓதப்பட்டு, பெருமான் வழிபாடு செய்யப் பட்டார் என்பது உறுதியாகிறது.

**வேதியர்களால் = மறையோர்களால் சிவபெருமான் வழிபடப்பட்டார் என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றைக் காண்போம்:-**

'பொய்ம் மொழியா **மறையோர்களேத்தப்** புகலி'

- பா.எண்- 1 , திருப்புகலி, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

'செய் தவ **நான்மறையோர்களே த்துஞ்**சீர்கோன்'

- பா.எண்- 2, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

'அங்கமும் வேதமும் ஓதும் நாவர் **அந்தணர்** நாளும் அடிபரவ'

- பா.எண்-1, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

'பன் **மறையோரவர்** தாம் பரவ'

- பா.எண்-5 , திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**வேதியர்கள் நிரம்பியதாக சிவத்தலங்கள் இருந்தன என்பதற்கான ப்ரமாணங்களும் பல உள்ளன. அவற்றுள் சில:-**

'நான்மறை யோர் **மிழலை'**

- பா.எண்-1, திருப்புகலியும் திருவீழிமிழலையும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**'கலிகடி அந்தணர்** ஓமப் புகையாற் கணமுகில் போன்ற'

- பா.எண்- 4, திருக்கலயநல்லூர், சுந்தரர், ஏழாம் திருமுறை.

'திருத்தக்க அந்தணர்களோது **நகரெங்கும்'**

- பா.எண்- 2, திருக்கானுட்டுமுள்ளூர், சுந்தரர், ஏழாம் திருமுறை.

இன்னும் பல உள்ளன.

**வேதங்கள் இவ்வளவு பெருமை கொண்டதற்கு – இறைவனே வேதரூபமாகத் திகழ்வதே காரணம் என்று, இறைவனை வேதர், வேதியர், மறையான், அந்தணர் என்றும் பாடியுள்ளனர்:-**

‘**மறையானை** மாசிலாப் புன்சடை மல்குவெண்’

- பா.எண்-1, திருக்கச்சியேகம்பம், ஞானசம்பந்தர், இரண்டாம் திருமுறை.

‘இறைவனை **மறையவனை** எண்குணத்தினனை’

- பா.எண்- 3, திருக்கானாட்டுமுள்ளூர், சுந்தரர், ஏழாம் திருமுறை.

‘பண் ஒளி சேர் **நான்மறையான்**’

- பா.எண்-6, திருவாக்கூர்த்தான்றோன்றிமாடம், ஞானசம்பந்தர். இரண்டாம் திருமுறை.

‘பண்நிலாவும் **மறைபாடலினன்**’

- பா.எண்-3, திருப்புகலூர், ஞானசம்பந்தர், முதல்திருமுறை.

**‘அந்தணன்’**

- பா.எண்-11, திருக்கொச்சைவயம், ஞானசம்பந்தர், இரண்டாம் திருமுறை.

**‘வேதியன்’**

- பா.எண்-04, திருமழபாடி, ஞானசம்பந்தர், இரண்டாம் திருமுறை.

**‘ஆரியன்’**

- பா.எண்- 5, திருமறைக்காடு, நாவுக்கரசர், ஆறும்திருமுறை.

**‘சாமவேதர்’**

- பா.எண்- 07, திருவீழிமிழலை, நாவுக்கரசர், நான்காம் திருமுறை

**‘வேத கீதன்’**

- பா.எண்- 01, திருப்பிரமபுரம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**‘வேத வேதாந்தன்’**

- பா.எண்- 04, தென்குடித்திட்டை, ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

இவ்வாறுக திருமுறைப் பாடல்களில் ஒவ்வொரு சொல்லாய், ஒவ்வொரு உரிச்சொல்லாய் ஆராய்ந்தால் வேதமே எங்கும் பரவியுள்ளதை அறியமுடிகிறது. வைதிக தர்மத்தையே அருளாளர்கள் ஒவ்வொரு பாடலிலும் நிலைநிறுத்தியுள்ளதையும் உணரமுடிகிறது.

## வேதங்கள் – எண்ணிக்கை :-

வேதங்கள் எண்ணிலடங்காதவை என்று நமது நூல்கள் முதற்கட்டமாகக் குறிப்பிடுவதை நாம் பல இடங்களில் காணலாம். வடமொழியில் இதனை **‘அநந்தா: வை வேதா:’** என்று குறிப்பிடுவர். இதே கருத்தானது நம் திருமுறைகளிலும்

“பன் **மறையோ**ரவர் தாம் பரவ”

- பா.எண்-5 , திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

'மறையாயின பல சொல்லி''

- பா.எண்- 5, திருமுதுகுன்றம், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

போன்ற இடங்களில் நிறுவப்பட்டது.

**வேதங்கள் – மூன்று :-**

அந்தந்த வேதங்களுக்குள் **'ஸம்ஹிதா, சாகா,ப்ராஹ்மணம், ஆரண்யகம்** என்று பல உட்பிரிவுகள் இருப்பினும், அவை அனைத்துமே பெரும்பாலும் I. **ப்ராஹ்மணம்,** II. **மந்த்ரம்** என்ற இரண்டே உட்பிரிவில் அடங்கி விடுகின்றன. அவற்றைப் பார்ப்போமாக,

1. ப்ராஹ்மணம்:-

தகுதியுள்ள மனிதன் எந்த கர்மாக்களையெல்லாம் செய்யவேண்டும் என்றவாறு கர்மங்களை விதிக்ககூடிய = ஆணையிடக் கூடிய பகுதிகளுக்கு **'ப்ராஹ்மணம்'** என்று பெயர்.

2. மந்த்ரம்

மேற்படி விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யும் போது, அதற்குத் தகுந்தாற்போல் பொருளை நினைத்துக் கொண்டே அந்த கர்மங்களைச் செய்யும் விதத்தில் அமைந்த வாக்யங்களுக்கு **'மந்த்ரம்'** என்று பெயர்; அதாவது மனனம் செய்யத் தகுந்தவை மந்த்ரங்கள்.

**மந்த்ரங்கள் மூன்று வகை:-**

மேலே விளக்கப்பட்ட மந்த்ரங்கள் மூன்று வகைப்பட்டவை. அதாவது, மந்த்ரங்களின் தன்மைகளுக்கேற்ப, அந்தந்த மந்த்ரங்களுக்கு **ரிக் (இருக்கு), யஜுஸ் (ர்), ஸாம (சாமம்)** எனப் பெயர் ஏற்பட்டது. அந்தத் தன்மைகளும் பலவாருக விளக்கப் பட்டுள்ளன.

**ருக் (இருக்கு)**

எந்தெந்த மந்த்ரங்களிலெல்லாம், அவற்றின் பொருளுக்குத் தக்கவாறு, அவற்றின் பாதங்கள் (வரிகள்) பிரிக்கப்பட்டு, ஏதோவொரு யாப்பிற்கு (சந்தஸ்) உட்பட்டு, எழுத்துக்கள் அமைந்துள்ளனவோ, அந்தந்த மந்த்ரங்களுக்கு **'ருக்'** மந்த்ரங்கள் என்று பெயர்.

மேலும் **'ருச்' (ருக்) (ருச ஸ்துதௌ)** என்று மூல வினைச் சொல்லிற்குத் துதித்தல் என்று பொருள். எனவே தேவர்களைத் துதிக்கப் பயன்படும் மந்த்ரங்களுக்கு **'ருக்'** என்று

பெயர். அதாவது, வைதிக யாகங்களைச் செய்யும் போது அந்தந்த தேவர்களைத் துதித்து அவர்களை வரவழைக்க வேண்டும். இதற்குப் பயன்படும் மந்த்ரங்கள் ருக்-மந்திரங்கள். யாகங்களில் இப்பணியைச் செய்பவருக்கு **'ஹோதா'** என்று பெயர்.

பெருமை பொருந்திய இந்த இருக்கின் வடிவினராகவும், இருக்கு மந்திரங்களில் பல இடங்களில் புகழப்படுபவராகவும், எனவே, இருக்கு மந்த்ரம் ஓதி வழிபடப் பட்டவராகவும், நம் சிவபெருமான் இருப்பதை நமது சமயாசிரியர்கள் வர்ணிப்பதைப் பாருங்கள்.

**"இருக்கின் மலிந்த இறைவரவர் போலாம்"**

- பா.எண்-10, திருச்செம்பொன்பள்ளி, ஞானசம்பந்தர், முதல்திருமுறை.

**"நாண்மலரால் நல் இருக்கு மந்திரம்**
**கொண்டு ஒன்றி வழிபாடு செயலுற்றவன்"**

- பா.எண்- 3, திருக்கோளிலி, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**"எண்ணுடை இருக்குமாகி, இருக்கினுட் பொருளுமாகி"**

- பா.எ. 3, திருஆப்பாடி, நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

**"இருக்குவாய் அந்தணர்கள் எழுபிறப்புள் எங்கும்"**

பா.எ. 5, திருக்கானூட்டுமுள்ளூர், சுந்தரர், ஏழாம் திருமுறை.

## ஸாம (சாமம்)

ரிக் மந்த்ரங்களையே முறைப்படி பாடலாகப் பாடினால், அப்பாடல்களுக்கு **'சாம மந்த்ரங்கள்'** என்று பெயர். 'சாமம்' என்ற சொல்லிற்குப் பல விளக்கங்கள் உள்ளன:-

(1) **'ஸாம'** என்ற சொல்லிற்கு **'நிகரானது' 'ஸமமானது'** என்று ஒரு பொருள். மேற்படி மந்த்ரங்கள் எண்ணிக்கையினால், ரிக்- மந்த்ரங்களுக்கு நிகராக இருப்பதாலும், தன்மையினால் ரிக்- மந்த்ரங்களுக்கு இவை ஒப்பானவை என **'ப்ரஜாபதி'** என்ற தெய்வம் நினைத்ததாலும் இம்மந்த்ரங்களுக்கு **'ஸாம மந்த்ரங்கள்'** என்று பெயர்.

(2) **'ஸாம'** என்ற சொல்லிற்கு **'போடப்பட்டது' 'செலுத்தப்பட்டது'** என்ற வகையில் மற்றொரு பொருளுண்டு. அதாவது, ரிக்- மந்த்ரங்களில் பாடல்கள் போடப் பட்டதால் (ரிக்-மந்த்ரங்களே பாட்டுத்தன்மை செலுத்தப்பட்டு ஓதப்பட்டதால்) இம்மந்த்ரங்களுக்கு ஸாம- மந்த்ரங்கள் என்று பெயர்.

(3) **‘ஸாம’** என்ற சொல்லிற்கு அமைதிப்படுத்தி சந்தோஷப்படுத்துதல் என்று பொருள். எனவே வைதிக யாகங்களில் தேவர்களை சந்தோஷப்படுத்தக்கூடிய பாடல்-மந்த்ரங்களுக்கு **‘ஸாம’** எனப் பெயர் வந்தது.

(4) நிறைவடையும் படிச் செய்தல் என்ற பொருளில் **‘ஸோ’ (ஷோ- அந்தகர்மணி)** என்ற மூலவினைச் சொல்லிலிருந்து உண்டானது **‘ஸாம’** என்ற சொல். அதாவது, வைதிக யாகங்களில் மூன்று அம்சங்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. யாகத்திற்குரிய தெய்வங்களைத் துதித்துக் கூப்பிடுதல் முதல் அம்சம். கூப்பிடப்பட்ட தெய்வங்களுக்குப் பூஜை செய்து ஹவிஸைக் (அவிர்பாகத்தினை) கொடுப்பது இரண்டாவது அம்சம். தெய்வங்களைப் பாடல்களால் மகிழ்வித்து வேள்வியினை (யாகத்தினை) நிறைவடையச் செய்வது மூன்றுவது அம்சம். எனவே, இந்த மூன்றுவது அம்சத்தில் / கட்டத்தில் யாகத்தினை நிறைவாகச் செய்வதற்காக ஓதப்படும் மந்த்ரங்கள் **‘ஸாம’** எனப்பட்டன.

வைதிகயாகத்தில் மேலே குறிப்பிட்டபடி மந்த்ரப் பாடல்களைப் பாடி யாகத்தினை நிறைவடையச் செய்யும் இப்பணியைச் செய்பவருக்கு **‘உத்காதா’** என்று பெயர்.

மேற்படி **‘ஸாமவேதத்திற்கு’ ‘சந்தஸ்’** என்றும் பெயர் என்று முன்பு பார்த்தோம். எனவே **‘சந்தஸ்’**- ஆகவும், ஓதப்படுவதாகவும் இருப்பதால், இதே ஸாமவேதத்திற்கு **‘சந்தோகம்’ (சந்தஸ்-கம்)** என்றும் பெயர். இவற்றையெல்லாம் நமக்கு உணர்த்தவே,

**“பாடினர் சாமவேதம்”**

- பா.எண்- 2, திருவதிகை வீரட்டம், நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

**“சந்தோக சாமம் ஓதும்** வாயானை”

- பா.எண்- 4, திருவீழிமிழலை, நாவுக்கரசர், ஆறும் திருமுறை.

**“சாமவேத கந்தருவம் விரும்புமே”**

- பா.எண்- 1, அடையாளத் திருத்தாண்டகம், நாவுக்கரசர், ஆறும் திருமுறை.

**“சாமவேதம் பெரிதும் உகப்பானை”**

- பா.எண்- 6, திருக்கச்சியேகம்பம், சுந்தரர், ஏழாம் திருமுறை.

என்றெல்லாம் திருமுறைகள் குறிப்பிட்டன.

**யஜுஸ் (ர்)**

ருக்கிற்கு **(இருக்கு)** உரிய லக்ஷணமும், ஸாமத்திற்கு **(சாமம்)** உரிய லக்ஷணமும் இல்லாத மந்த்ரங்களுக்கு யஜுஸ்(ர்) என்று பெயர். அதாவது, யாப்பிலக்கணத்திற்கோ,

பாதப் பிரிவுகளுக்கோ கட்டுப்பட்டதாக இல்லாமலும், பாடலாக இல்லாமலும் இருக்கக்கூடிய மந்த்ரங்களுக்கு **‘யஜுர் மந்த்ரங்கள்’** என்று பெயர்

மேலும், **‘யஜ’ (யஜ – தேவபூஜா – ஸங்கதிகரண-தாநேஷு)** என்ற மூல வினைச் சொல்லிற்கு தேவர்களை வழிபடுதல், கொடுத்தல் என்றவாறு பொருள். அதாவது, வைதிக யாகங்களைச் செய்யும் போது, அந்தந்த தேவர்களுக்கு ‘ஹவிஷ்’ என்ற அவிர்பாகத்தை யாகாக்னியில் இட்டு அளிக்கவேண்டும். எனவே அவ்வாறு கொடுக்கும் தருணத்தில், கொடுப்பதற்காகவே சொல்லப்படும் மந்த்ரங்கள் யஜுர் மந்த்ரங்கள். யாகத்தில் இப்பணியைச் செய்பவருக்கு **‘அத்வர்யு’** என்று பெயர்.

வேதங்களில் **‘ஆரண்யகம்’** என்று ஒரு பகுதி உண்டு. காட்டில் ஓதத்தக்க மந்த்ரங்கள் என்று அதற்குப் பொருள். இந்த மந்த்ரங்களில் உபநிஷத்தாகிய தத்துவக் கருத்துக்கள் ஏராளமாக அமைந்திருக்கும். தைத்திரீய-ஆரண்யக மந்த்ரங்கள் இதன் கீழ் இடம்பெறும். **‘ஆரண்யகம்’** என்ற இச்சொல் **‘ஆரணம்’** என உள்ளதைக் காணலாம்.

**“ஆலினிற் கீழிருந் தாரணம் ஓதி”**

- பா.எண்- 6 திருக்கடவூர் வீரட்டம், நாவுக்கரசர், நான்காம் திருமுறை.

**“ஆயிரம் ஆரணம் ஓதிலும்”**

- பா.எண்- 6 தனி, நாவுக்கரசர், ஐந்தாம் திருமுறை.

இவ்வாருக ரிக், ஸாம, யஜுர் என மூன்று வகையான மந்த்ரங்களைப் பார்த்தோம். எனவே, வேதங்களில் பொதுவாக (1) ப்ராஹ்மணம் (2)மந்த்ரம் என்று இரண்டே உட்பிரிவு இருப்பினும், இரண்டாவது உட்பிரிவாகிய மந்த்ரமானது (அ) ரிக் மந்த்ரங்கள்,(ஆ) சாம மந்த்ரங்கள் (இ) யஜுர் மந்த்ரங்கள், என்று தன்மைகளுக்கேற்ப மூவகைப் படவே, வேதங்கள் எண்ணிலடங்காதவையாக இருப்பினும், **‘வேதங்கள் மூன்று’** என்று, மேலே சொன்னகண்ணோட்டப்படி விவரிக்கப்பட்டன. எனவே வேதத்தினை **‘த்ரயீ’** என்று குறிப்பிடுவர்.

## வேதங்கள் – நான்கு

அறத்தையும், தெய்வத்தையும் விளக்கிய வேதங்களில், விதிக்கப்பட்ட யாகங்கள் வைதிகயாகங்கள். அந்த யாக நிகழ்வுகளில் ஹோதா, அத்வர்யு, உத்காதா என்ற மூவரும் தங்கள் பணியைச் சரியாகச் செய்கிறார்களா? என்று கண்காணிப்பதற்கு ஒருவர் இருப்பார். அவருக்கு **‘ப்ரஹ்மா’** என்று பெயர். இவர் தொடர்புடைய விஷயத்தினை இனிப் பார்ப்போம்.

மந்த்ரங்களுக்குரிய மூன்று இலக்கணங்களைப் பார்த்தோமல்லவா! அவற்றுள் ருக்கிற்குரிய **(இருக்கு)** லக்ஷணத்தோடு கூடிய மந்த்ரங்களை மட்டுமே கொண்டவேதங்கள் (1) **'ரிக் வேதம்'** என்பதில் அடங்குவன. அவற்றுள் ஸாம (சாமம்)த்திற்குரிய லக்ஷணத்தோடு கூடிய மந்த்ரங்களை மட்டுமே கொண்ட வேதங்கள் (2) **'ஸாமவேதம்'** என்பதில் அடங்குவன. அவற்றுள் யஜுஸ்ஸிற்குரிய லக்ஷணத்தோடு கூடிய மந்த்ரங்களை மட்டுமே கொண்ட வேதங்கள் (3) **'யஜுர்வேதம்'** என்பதில் அடங்குவன. வைதிக யாகத்தில் அனைவரையும் கண்காணிப்பவரான ப்ரஹ்மா தொடர்புடைய வேதம் (4) **'அதர்வண வேதம்'** ஆகும்.

அதாவது வைதிகயாகத்தில், நிகழ்வுகளின் வரிசைப்படி பார்ப்போமேயாகில், (1)முதல் நிகழ்வினைச் செய்யும் **'ஹோதா'** தொடர்புடைய வேதம் **'ரிக்வேதம்'**. (2)இரண்டாம் நிகழ்வினைச் செய்யும் **'அத்வர்யு'** தொடர்புடைய வேதம் **'யஜுர்வேதம்'**. (3)மூன்றும் நிகழ்வினைச் செய்யும் **'உத்காதா'** தொடர்புடைய வேதம் **'ஸாமவேதம்'**. (4)அனைத்தையும் கண்காணிக்கும் **'ப்ரஹ்மா'** தொடர்புடைய வேதம் **'அதர்வணவேதம்'**.

இவ்வாருக, தன்மையின் அடிப்படையில் வேதங்கள் மூன்று என்றும், பிரிவின் அடிப்படையில் வேதங்கள் நான்கு என்றும் தெளிவுற வேண்டும். இதைத் தான் நமது சமயாசிரியர்கள்

> **"மறைகளாயின நான்கும்** மற்றுள பொருளுமெல்லாந் துறையும்
> தோத்திரத்திறையும் தொன்மையும் நன்மையுமாய'
>
> – பா.எண் 1 திருவானைக்கா, சுந்தரர், ஏழாம் திருமுறை.
>
> **'மாறு மறை நான்காய்"**
>
> - பா.எண் 2. திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

என்றெல்லாம் நிலைநிறுத்தினர்கள்.

### மறைகள் நான்கு என்பது வடமொழி மறையிலேயே உள்ளது:-

"**ருசாம்** ப்ராசீ மஹதீ திக் உச்யதே தக்ஷிணும் ஆஹு: **யஜுஷாம்** அபாராம் |
**ஸாம்னும்** உதீசீ மஹதீ திக் உச்யதே **அதர்வணும்** அங்கிரஸாம் ப்ரதீசீ ||"

இந்நான்கு மறைகளும் சைவர்களாகிய நமது தெய்வமாகிய பதி-ஸதாசிவப் பெருமானின் கிழக்கு முதலிய நான்கு முகங்களிலிருந்துதான் தோன்றின என நமது ஸ்ரீமத் காமிகாகமம் குறிப்பிடுகிறது.

**'ஸதாசிவோ ஹி பகவான் மந்த்ர-தந்த்ரம் அபாலயத்|**

**ருக்-யஜுஸ்-ஸாம-அதர்வாணி புருஷாதி-ஆனனேத் பவா:||**

-ச்லோ, 91, ஆசார்யாபிஷேக விதி, ஸ்ரீமத் காமிகாகமம், உத்தரபாகம்.

எனவே, வேதம், திருமுறை, சைவாகமம் ஆகிய மூன்று ப்ரமாணங்கள் படியும் மேற்படி நான்கு வேதங்களும் நமக்கு நன்மை பயப்பனவே என்று வைதிக-தமிழ்ச்-சைவர்களாகிய நாம் விச்வாசம் கொள்வோமாக.

மேற்படி நால்வேதங்களுள், 21விதமான ரிக்வேதங்களும், 101விதமான யஜுர் வேதங்களும், 1000விதமான ஸாமவேதங்களும், 9விதமான அதர்வண வேதங்களும் இருந்தன. இவ்வாறு அளப்பரியதாக வேதங்கள் இருந்ததையே,

**"சுருதி ஆயிரம் ஓதி அங்கமான தொல்கலைகள் எடுத்தியம்பும் தோன்றலாரை"**

- பா.எண்- 265, திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், பெரியபுராணம்.

எனக் குறிப்பிட்டனர் நம் பெரியோர்கள்.

சிவபெருமான் நம் பொருட்டு வேதங்களைத் தொகுத்தார் என்பதை,

**"தொகுத்தவன் அருமறை"**

- பா.எ. 6, திருவிற்கோலம், ஞானசம்பந்தர், மூன்றும் திருமுறை.

**"தொகுமறையோர்கள்"**

- பா.எண்-3, திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

திருமுறைகளில் உள்ள **'வேத''** என்ற சொல்லிற்குப் பலப் போலிச் சைவர்கள்,போலியான பொருளைப் புகுத்திவிடுவார்களோ, என்ற அச்சத்தால், அம்முயற்சியை முறியடிப்பதற்காகவே, நமது திருமுறை ஆசிரியர்கள், பல சொல்லாட்சிகளையும், பல பொருளாட்சிகளையும், செய்துள்ளார்களோ என்று ப்ரமிக்க வேண்டியுள்ளது. அவற்றையெல்லாம் விரித்துரைத்தல், எளிதல்ல என்பதால், ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன்.

திருமுறைகளில் **'வைதிக'** என்ற சொல் – பல இடங்களில் காணப்படுகிறது:-

"மண்ணின் மறையோர் மருவு **வைதிகமும்**

மாதவமும் மற்றும் உலகத்"

- பா.(6), திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், 3ஆம் திருமுறை.

**“வைதிகத்தின்** வழி ஒழுகாத அக்

கைதவம் உடைக் கார் அமண் தேரரை”

- பா.(2), திருஆலவாய், ஞானசம்பந்தர், 3ஆம் திருமுறை.

வடமொழியில் உள்ள பல பெயர்ச்சொல்- பகுதிகளுள் (ப்ரக்ருதி), **‘வைதிக’** எனும் சொல்லானது, **‘தத்திதம்’** (தத்திதாந்தம்) எனும் வகையைச் சாரும். இவ்வகைச் சொற்களில் மூலச் சொல்லில் உள்ள முதல் அ அல்லது ஆ என்ற எழுத்துக்கள் ஆ என நெடிலாக மாறும். உ-ம்.

(1) சமரு ⟶ சாமரம், (2)கணபதி ⟶ காணபதம். அதுபோலவே, முதல் இ, ஈ, ஏ ஆகியவை ஐ என மாறும். (1)விஷ்ணு ⟶ வைஷ்ணவம், (உ) சிவம் ⟶ சைவம். அதுபோல, மூலச்சொல்லில் முதலில் உள்ள உ, ஊ, ஓ, ஔ ஆகியவை ஔ என மாறும். உ-ம். (1) குமாரன் ⟶ கௌமாரம். (2) உமா ⟶ ஔமம்.

எனவே திருமுறை ஆசிரியர்கள் **‘வேதம்’** என்றும், **‘வைதிகம்’** என்றும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளதால், வேதம் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டே **‘வைதிகம்’** என்ற சொல் அமைந்தது உறுதி. எனவே,

**“மாருமறை நான்காய்”**

- பா.எண் 2, திருவீழிமிழலை, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**“பொய்ம்மொழியாமறை”**

பா.எண் 1, திருப்புகலியும் திருவீழிமிழலையும், ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

**“மெய்ம்மொழி நான்மறை”**

பா.எண் 4, திருப்புகலி, ஞானசம்பந்தர், முதல் திருமுறை.

என்றெல்லாம் ஏத்தப்பட்ட மறைகளையே ப்ரமாணிப்போமாக.

இதுகாறும் விளக்கப்பட்ட வேதநூல்களை அடிப்படையாகக் கொண்ட வைதிக தர்மத்தையே நமது அருளாளர்கள் நமக்கு போதித்துள்ளனர். நாமும் அவர்களைப் பின்பற்றியே **‘வைதிக-தமிழ்ச்-சைவர்களாக’** உய்வோமாக.

**“பழைய வைதிகசைவம் பரக்கவே”**

**“சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக”**

~~~~~~~~~~~~~~
~~~~~~~~~~~~~~